# புனித வாரம்

## உபகரணம்

Do It Yourself



Est. 1955
DIOCESE OF PENANG
MALAYSIA

குருத்து ஞாயிறு




01

புனித வியாழன்




11

புனித வெள்ளி




22

உயிர்ப்பு ஞாயிறு




35

# குருத்து ஞாயிறு



Diocese of Penang

## குருத்தோலை

## தீர்த்தம்



சிலுவையின் அடையாளம்

**தந்தை மகன் தூய ஆவியின் பெயராலே. ஆமென்**

**தலைவர்:** **நமது ஆண்டவரின் புனிதமிக்க பாஸ்கா மறைபொருளில் இணைந்து சென்றிட கடந்து ஐந்து வாரங்களாக தவம் மற்றும் தரும காரியங்களில் நாம் ஈடுபட்டோம். துன்பப்படவும், இறக்கவும், உயிர்த்தெழவும்; கிறிஸ்து தமது மீட்பின் பணியை முழுமைப்படுத்த சொந்த ஊரில் மாட்சியோடு நுழைகிறார். வாருங்கள் அவருடைய மீட்பினை நினைவு கூர்ந்து முழுபக்தியோடும் விசுவாசத்தோடும் அவரில் தொடங்குவோம். சிலுவையில் அவரின் துன்பத்தில் இணைந்து, அவரின் உயிர்ப்பிலும் புது வாழ்விலும் பங்கு பெறுவோம்.**

(ஆசீர்வதிக்கப்பட்ட குருத்தோலைகள் உங்களிடம் இல்லாவிடில்)

(குருத்தோலைகளின் மேல் தீர்த்தத்தை தெளித்து கீழ்காணும் செபத்தை சொல்லவும்)

**தலைவர்:** எல்லாம் வல்ல இறைவா, இந்த குருத்தோலைகளை புனிதப்படுத்த உம்மிடம் வேண்டுகிறோம். இன்று நாங்கள் மகிழ்ச்சியோடு இயேசுவே எங்களின் மீட்பர் அரசர் என்று ஆர்ப்பரிக்கின்றோம். அவரை நாங்கள் நம்பிக்கையோடும் மகிழ்ச்சியோடும் பின்பற்றி முடிவில்லா நித்திய வாழ்வை அடைவோம் என என்றென்றும் வாழ்ந்து ஆட்சி செய்கின்ற அவர் வழியாக மன்றாடுகிறோம்.

**அனைவரும்:** ஆமென்

கிறிஸ்து வெற்றியோடு எருசலேமிற்குள் கழுதையின் மேலேறி நுழைந்ததை நினைவு கூறுவோம். இயேசுவின் காலத்தில் பெருந்திரளான மக்கள் ஒன்றுகூடி, குருத்தோலைகளையும் மேலாடைகளையும் வழியில் விரித்தும், கைகளிலும் ஏந்தி, கிறிஸ்து தாவீதின் மகன் இஸ்ரயேலின் அரசர் என்று வாழ்த்துகிறார்கள். நாமும் ஆசிர்வதிக்கப்பட்ட குருத்தோலைகளை கையில் ஏந்தி ஆரம்ப பாடலை பாடுவோம்.

# ஓசன்னா பாடுவோம்

**ஓசன்னா பாடுவோம், ஏசுவின் தாசரே,**
**உன்னதத்திலே தாவீது மைந்தனுக்கு ஓசன்னா!**

**ஓசன்னா பாடிடுவோம் (4)**

1. **முன்னும் பின்னும் சாலேம் நகர் சின்னபாலர் பாடினார்**
   **அன்று போல இன்றும் நாமும் அன்பாய்த் துதி பாடுவோம்**

2. **சின்ன மறி மீதில் ஏறி அன்பர் பவனி போனார்**
   **இன்னும் என் அகத்தில் அவர் என்றும் அரசாளுவார்**

3. **பாவமதைப் போக்கவும் இப்பாவியைக் கைதூக்கவும்**
   **பாசமுள்ள ஏசையாப் பவனியாகப் போகிறார்**

4. **பாலர்களின் கீதம் கேட்டுப் பாசமாக மகிழ்ந்தார்**
   **ஜாலர் வீணையோடு பாடித் தாளைமுத்தி செய்குவோம்**

5. **குருத்தோலை ஞாயிற்றில் நம் குருபாதம் பணிவோம்**
   **கூடி அருள் பெற்று நாமும் திரியேகரைப் போற்றுவோம்**

**https://www.youtube.com/watch?v=CEgckmZ0bk4**

# OESANNA PAADUVOEM

Oesanna paaduvoem, Yesuvin thasare
unnathatthile thaavethu mainthanukku oesanna

Oesanna paadiduvoem (4)

1. Munnum pinnum saalem nagar sinnabalar paadinaar (2)
   Andru poela indrum naamum anbaaith thuthi paaduvoem

2. Sinna mari meethil yeri anbar bhavani poenaar (2)
   Innum en agatthul avar endrum arasaaluvar

3. Paavamathaip poekkavum ippaaviyaik kaithookum (2)
   Paasamulla Yesaiyaap bhavaniyaaghe poeghiraar

4. Baalargalin geetham kaettu paasamaaghe maghiznthaar (2)
   Jaalar veenaiyoedu paadi thalaimutthi seighuvoem

5. Kuruttholai gnaayittril nam gurupaatham panivoem (2)
   Koodi arul pettru naamum thiriyaegharai poettruvoem

https://www.youtube.com/watch?v=CEgckmZ0bk4

# மாற்கு 11: 1-10

**தூய மாற்கு எழுதிய புனித நற்செய்தியிலிருந்து வாசகம்.**

**இயேசு தம் சீடரோடு ஒலிவமலை அருகிலுள்ள பெத்பகு, பெத்தானியா என்னும் ஊர்களுக்கு வந்து, எருசலேமை நெருங்கியபொழுது இரு சீடர்களை அனுப்பி, "உங்களுக்குஎதிரே இருக்கும் ஊருக்குள் போங்கள்; அதில் நுழைந்தவுடன், இதுவரை யாரும் அமராத ஒரு கழுதைக்குட்டி கட்டி வைக்கப்பட்டிருப்பதைக் காண்பீர்கள். அதை அவிழ்த்துக் கொண்டு வாருங்கள். யாராவது உங்களிடம், "ஏன் இப்படிச் செய்கிறீர்கள்?" என்று கேட்டால், "இது ஆண்டவருக்குத் தேவை, இதை அவர் உடனே திருப்பி இங்கு அனுப்பிவிடுவார்" எனச் சொல்லுங்கள்" என்றார். அவர்கள் சென்று ஒரு வீட்டுவாயிலுக்கு வெளியே, தெருவில் ஒரு கழுதைக் குட்டியைக் கட்டி வைத்திருப்பதைக் கண்டு அதை அவிழ்த்துக் கொண்டுவந்தார்கள். அங்கே நின்றுகொண்டிருந்த சிலர் அவர்களிடம், "என்ன செய்கிறீர்கள்? கழுதைக் குட்டியையா அவிழ்க்கிறீர்கள்?" என்று கேட்டனர். அவர்கள் இயேசு தங்களுக்குக் கூறியபடியே சொல்ல, அங்கு நின்றவர்களும் போகவிட்டனர். பிறகு அக்கழுதைக்குட்டியை இயேசுவிடம் கொண்டு வந்து, அதன் மேல் தங்கள் மேலுடைகளைப் போட, அவர் அதன் மீது அமர்ந்தார். பலர் தங்கள் மேலுடைகளையும், வேறு சிலர் வயல் வெளிகளில் வெட்டிய இலைதழைகளையும் வழியில் பரப்பினர். முன்னேயும் பின்னேயும் சென்றவர்கள், "ஓசன்னா! ஆண்டவர் பெயரால் வருகிறவர் போற்றப்பெறுக! வரவிருக்கும் நம் தந்தை தாவீதின் அரசு போற்றப்பெறுக! உன்னதத்தில் ஓசன்னா!" என்று ஆர்ப்பரித்தனர்.**

தலைவர்: இது கிறிஸ்துவின் நற்செய்தி.

அனைவரும் : கிறிஸ்துவே உமக்கே புகழ்.

இன்று நாம் இயேசுவின் எருசலேம் பயணத்தை தியானிப்போம். இங்கேதான் திரும்பி வர முடியாத இயேசுவின் செயல்பாடு தொடங்குகிறது. இயேசுவின் பணிகளின் இறுதி பயணம். சீடர்களிடம் தனது தந்தையின் சித்தமான பாடுகள், மரணம் மற்றும் உயிர்ப்பு ஆகியவை பற்றி கூறும்பொழுது இயேசு ஆழமான தனது பணியினையும் குறிப்பிடுகின்றார். உலகுக்கு பகிர சொன்னார். கழுதையின் மேலேறி வந்தது அவரின் தாழ்ச்சியை காட்டுகிறது. சக்கரியா 9:9 சொன்னதுபோல் வெற்றி பயணத்தில் தாழ்வான மிருகத்தின் மேலேறி வருவது சமாதானத்தை குறிக்கிறது. என்னே இயேசுவின் துணிச்சல். எருசலேமில் பாடுகள் உண்டு என்பது அவருக்குத் தெரியும். கொன்று விடுவார்கள் என்பது அவருக்குத் தெரியும். இன்று குருத்தோலை ஏந்தி ஓசான்னா பாடுபவர்கள் ஓரிரு நாட்களில் சிலுவையில் அறையும் என்று கத்துவார்கள் என்பதும் அவருக்குத் தெரியும். இருந்தும் துணிந்து செல்கிறார். ஏன்? இலட்சியத்தை நிறைவேற்ற, நாம் மீட்படைந்து விண்ணகம் சேர. யாராவது பாடுகள் படுவதற்கு, துன்பப்படுவதற்கு, கொல்லப்படுவதற்கு ஆரவாரத்தோடு, மகிழ்ச்சியோடு பவனி செல்வார்களா? ஆனால் இயேசு சென்றார். அன்பின் முழு வடிவம் இயேசு. இந்த புனித வாரத்தில் இயேசுவின் அன்பை முழுமையாக அனுபவித்து நமது வாழ்வின் ஒவ்வொரு தருணத்தையும் விசுவாசித்து, எதிர்நோக்கி வாழுவோம். இயேசுவின் மேல் கொண்ட விசுவாசத்தையும், தூய ஆவியாரின் மூச்சையும் தந்தை இறைவனின் இரக்கத்தையும் உயிர்பெற்றழெ செய்வோம்.

**அனைவரும்:**

**ஆண்டவரே எங்கள் மன்றாட்டை கேட்டருளும்**

1. அன்பின் ஆண்டவரே, நாங்களும் யேசுவைப் போல் தன்னலமற்ற அன்பை மற்றவர்களுக்கு காட்டிடவும், இயேசுவின் ரூபமாய் வாழ்ந்திடவும் மன்றாடுகிறோம்.
2. கிறிஸ்துவ தொடக்க பயிற்சியில் பயணம் செய்வோருக்காக மன்றாடுவோம். இவர்கள் அனைவரும் கிறிஸ்துவின் முழுமையான அன்பை உணர்ந்து அனுபவித்து வாழ்ந்திட மன்றாடுகிறோம்
3. நமது தனிப்பட்ட கருத்துகளுக்காக மன்றாடுவோம்.

**கர்த்தர் கற்பித்த செபம் அனைவரும் சேர்ந்து சொல்லுவோம்**

**தலைவர்:** இரக்கமிகு நல்ல இறைவா உமக்கு நாங்கள் நன்றி கூறுகிறோம். இயேசுவின் பாடுகளையும் மரணத்தையும் நினைவு கூறுகின்ற இந்த புனித வாரத்தில் எங்களுக்கு பலவிதமான விசயங்களால் கவன சிதறல் ஏற்படுகிறது. உமது மகன் மேல் எங்கள் கண்களை திருப்பியருளும். இயேசுவின் பாடுகளில் நடந்து, அவரின் உயிர்ப்பில் பங்கு பெற்று தூய்மையான உள்ளதோடு அவரில் வாழ்ந்திட எங்கள் கண்களை திறந்தருளும். ஞானத்தோடு பேசவும், நீதியோடு நடந்திடவும், மற்றவர்களின் துன்பத்தை அறிந்து அவர்களுக்கு உதவிடவும் உம்மிடம் மன்றாடுகிறோம். உம் திருமகன் இயேசு கிறிஸ்துவின் வழியாக மன்றாடுகிறோம்.

**அனைவரும்:** ஆமென்.

சிலுவையின் அடையாளம்

தந்தை மகன் தூய ஆவியின் பெயராலே. ஆமென்

# புனித வியாழன்



Diocese of Penang

நாற்காலி



தண்ணீர்





அகன்ற பாத்திரம்

துண்டு

சிலுவையின் அடையாளம்

**தந்தை மகன் தூய ஆவியின் பெயராலே. ஆமென்**

இன்றிரவு நாம் இயேசுவின் இராவுணவையும், அவர் சீடர்களுக்கும் நமக்கும் ஏற்படுத்திய நற்கருணையையும் நினைவு கூறுகிறோம். சீடர்களுக்கு பாதங்களை கழுவியதின் மூலம் நாமும் மற்றவர்களுக்கு அவருடைய சீடர்களாக பணி செய்ய தயாராக இருக்க வேண்டும் என்ற நினைவுறுத்தலையும் ஞாபகப்படுத்துகிறோம்.

**தலைவர்:** எல்லாம் வல்ல இறைவா, எங்களுக்குஆன்ம உணவளிக்க தனதுசொந்த உடலையும் ரத்தத்தையும்இயேசு அளித்தார். இயேசுதமது உடலை பகிர்ந்து உண்ணும்போது நாமும் மற்றவர்களுக்கு ஆன்ம உணவாக மாறலாம். நமது வாழ்வும் ஆசீர்வதிக்கப்பட்டு, உடைக்கப்பட்டு, மற்றவர்களுக்கு உதவுவதாக. இவை அனைத்தையும் வாழ்வளிக்கும்அப்பமாகிய இயேசு கிறிஸ்துவழியாய் மன்றாடுகிறோம்.

**அனைவரும்:** ஆமென்.

**வாருங்கள், இந்த பாடலின் வரிகளை நாம் தியானிப்போம்**

# இதை என் நினைவாய்

**இதை என் நினைவாய் செய்யமாட்டாயா?**
**என் உடலை உண்டு உயரமாட்டாயா?**
**குருதி அருந்தி திருந்த மாட்டாயா**
**என் குருதி அருந்தி திருந்தமாட்டாயா?**
**என்னை போல வாழ மாட்டாயா?**
**இதை என் நினைவாய் செய்யமாட்டாயா?**
**என் உடலை உண்டு உயரமாட்டாயா?**

1. **கன்னத்தில்அறைந்தால் கன்னத்தை காட்ட சொன்னேன்**
   **தீமை செய்தால் நன்மை செய்யசொன்னேன்**
   **இதற்கு மேல் நான் என்னகேட்கின்றேன்?**
   **வெறும் வார்த்தை அல்ல வாழ்ந்தும் காட்டிவிட்டேன்.**

2. **பணிவிடைபெற அன்பு பணியை செய்யசொன்னேன்**
   **தாழ்ச்சிகொண்டால் உயர்வு உறுதி என்றேன்.**
   **இதற்கு மேல் நான் என்னகேட்கின்றேன்?**
   **உன்னை வாழ செய்ய வாழ்ந்தும் காட்டிவிட்டேன்.**

https://www.youtube.com/watch?v=6-WXp-S811g

# ITHAI EN NINAIVAI

**Ithai en ninaivai seiya maataya?**
**En udalai undu uyara maataya?**
**Kuruthi arunthi thiruntha maataya?**
**En Kuruthi arunthi thiruntha maataya?**
**Ennai pola vaazha maataya?**
**Ithai en ninaivai seiya maataya?**
**En udalai undu uyara maataya?**

1. **Kannathil arainthaal kannathai kaata sonnen**
   **Theemai seithal nanmai seiya sonnen**
   **Itharku mael naan enna ketkindren?**
   **Verum vaarthai alla vazhnthum kaativitten**

2. **Panividai pera anbu paniyai seiya sonnen**
   **Thazhchi kondaal uyarvu uruthi endren**
   **Itharku mael naan enna ketkindren?**
   **Unnai vazha seiya vaazhnthum kaativitten**

**https://www.youtube.com/watch?v=6-WXp-S811g**

# 1 கொரிந்தியர் 11: 23-26

திருத்தூதர் பவுல் கொரிந்தியருக்கு எழுதிய முதலாம் திருமுகத்திலிருந்து வாசகம்

**ஆண்டவரிடமிருந்து நான் எதைப் பெற்றுக்கொண்டேனோ அதையே உங்களிடம் ஒப்படைக்கிறேன். அதாவது, ஆண்டவராகிய இயேசு காட்டிக்கொடுக்கப்பட்ட அந்த இரவில், அப்பத்தை எடுத்து, கடவுளுக்கு நன்றி செலுத்தி, அதைப்பிட்டு, “இது உங்களுக்கான என் உடல். இதை என் நினைவாகச் செய்யுங்கள்” என்றார். அப்படியே உணவு அருந்தியபின் கிண்ணத்தையும் எடுத்து, “இந்தக் கிண்ணம் என் இரத்தத்தால் நிலைப்படுத்தப்படும் புதிய உடன்படிக்கை. நீங்கள் இதிலிருந்து பருகும் போதெல்லாம் என் நினைவாக இவ்வாறு செய்யுங்கள்” என்றார். ஆதலால், நீங்கள் இந்த அப்பத்தை உண்டு கிண்ணத்திலிருந்து பருகும் போதெல்லாம் ஆண்டவருடைய சாவை அவர் வரும்வரை அறிவிக்கிறீர்கள்.**

தலைவர்: ஆண்டவரின் அருள்வாக்கு.

அனைவரும் : இறைவனுக்கு நன்றி.




https://www.youtube.com/watch?v=YunmzzbgN94

**இயேசுவின் பாஸ்கா விழாவை இன்று கொண்டாடுகின்றோம். பாஸ்கா என்றால் கடத்தல் என்று பொருள் பழைய ஏற்பாட்டில் யாவே கடவுளின் இரக்கத்தினால் பாரவோனின் ஆதிக்கத்திலிருந்தும், அடிமைத்தனத்திலிருந்தும் இஸ்ரயேல் மக்கள் செழிப்புமிக்க வளமையான கானான் தேசத்திற்குக் கொண்டுவரப்பட்டார்கள். அதாவது பாஸ்கா என்ற கடத்தல் நிகழ்வின் வழியாகத் தீமையின் ஆதிக்கத்திலிருந்து கடந்து வந்து இறைவனை பற்றிக்கொண்டனர். இயேசு தன்னை உடைத்து தனது உடலையும் இரத்தத்தையும் நம்மீது கொண்ட அன்பின் வெளிப்பாடாக நமக்கு உணவாகத் தருகின்றார். அத்தோடு தன் மீட்புப் பணி இவ்வுலகத்தில் தொடர குருத்துவத்தையும் ஏற்படுத்துகின்றார்.**

**இத்தருணத்தில் இயேசு தன்னல நாட்டமின்றி இந்த மானிடரின் மீட்புக்காக தன்னையே வழங்கியதுபோல நம் அருகில் வாழும் மனிதர்களை அன்பு செய்துவாழவும், குருக்கள் அனைவரும் இயேசு செய்த பணியை மனத்துணிவுடனும், மனித மாண்புடனும் தொடர்ந்து செய்து நீதி, அன்பு சகோதரத்துவம், சமுத்துவம் போன்றவற்றை நிலைநாட்டாவும், இயேசுவை மக்களுக்கு கொடுப்பவர்களாகவும் திகழ செபிப்போம்.**

## பாதம் கழுவுதல்

**தலைவர்:**

**இறைவா, இந்த உலகிற்கு நீர் உமது மகனை அனுப்பினீர். அவர் தம்முடைய வேளை வந்தபோது தனது சீடர்களின் பாதங்களை கழுவினார். நீர் அவருக்கு அனைத்தையும் தந்தீர். உம்மிடமிருந்து வந்தார் உம்மிடமே திரும்பும் வேளையில் என்ன செய்தார்? தரையில் முழங்காலிருந்து தனது நண்பர்களின் பாதத்தை கழுவினார். அவர் அவர்களின் போதகராகவும் ஆண்டவராகவும் இருந்தார் ஆயினும் தனது சீடர்களின் பாதங்களை கழுவினார். ஆண்டவரே நாங்கள் உம்மை உதாரணமாக கொண்டு உம்மை போல் மாறிட ஆசீர்வதியும். நாங்கள் ஒருவர் மற்றவரை அன்பு செய்யும் பொது உம்மிடைய சீடர்கள் என்று இவ்வுலகம் அறியும். உம்முடைய பணியை செய்ய எங்கள் கரங்களையும் எங்கள் எண்ணத்தையும் உறுதிப்படுத்தியருளும். மற்றவர்களுக்காக தன்னையே தாழ்த்தி கொண்ட உமது மகனின் சாயலை எங்களின் மனதில் இருத்தியருளும். இவை அனைத்தையும் இயேசு கிறிஸ்து வழியாய் மன்றாடுகிறோம்.**

**அனைவரும்: ஆமென்**

(இப்போது தலைவர் மற்றவர்களையும் ஒருவர் மற்றவர் பாதங்களை கழுவ அழைக்கிறார். ஒருவர் பின் ஒருவராக அகன்ற பாத்திரத்தின் மேல் தங்களின் பாதங்களை உயர்த்தி பிடிக்கும்போது, தண்ணீரை ஊற்றி, துண்டால் துடைக்கலாம்)

(அனைவரும் அமர்ந்து கொள்ளவும் )

அனைவரும்:

ஆண்டவரே எங்கள் மன்றாட்டை கேட்டருளும்

1. திருச்சபையை வழிநடத்தும் திருத்தந்தை, அவரோடு இணைந்து பணியாற்றும் ஆயர்கள், குருக்கள், துறவறத்தார் மற்றும் பொதுநிலையினர் அனைவரையும் உடல் உள்ள ஆன்ம நலனோடு வாழவும், இறைமக்களை ஒருவருக்கொருவர் பணிபுரிந்து வாழ்பவர்களாக வழிநடத்திட வேண்டுமென்று உம்மை மன்றாடுகின்றோம்.

2. நீர் சீடர்களின் பாதங்களை கழுவி அன்பின் முக்கியத்துவத்தை முழுமையாக எங்களுக்கு உணர்த்தினீர். இதை உணர்ந்து, உமது அன்பின் அடிச்சுவட்டில் நாங்கள் தொடர்ந்து நடக்கவும், எங்களுடைய உள்ளத்தையும், சிந்தனைகளையும் பிறருக்கு அர்பணித்திடவும் வரம் தர வேண்டுமென்று உம்மை மன்றாடுகின்றோம்.

3. குருக்கள் யாவரும் தங்களது வாழ்வில் எதிர்கொள்ளும் போரட்டங்களில் வெற்றிக்கொள்ள தேவையான மன உறுதியையும், ஆற்றலையும் தந்து வழிநடத்திடவும், பொது குருத்துவத்தில் உமது வழி வாழ அழைப்பு பெற்ற இறைமக்களும் அவ்வாறே வாழ்ந்திடவும் வரம்தர வேண்டுமென்று உம்மை மன்றாடுகின்றோம்.

4. நமது தனிப்பட்ட கருத்துகளுக்காக மன்றாடுவோம்.

**கர்த்தர் கற்பித்த செபம் அனைவரும் சேர்ந்து சொல்லுவோம்**

**தலைவர்:**

**இன்றைய நாள் நற்கருணையை ஏற்படுத்தியதை மட்டும் நாம் நினைவுகூறவில்லை. மாறாக, குருத்துவத்தை நிறுவியதையும் நினைவு கூறுகிறோம். ஆகவே, இன்றைய செபத்தில் நமது பாப்பானவர், ஆயர்கள், குருக்கள் அனைவரையும் ஒப்பு கொடுப்போம்.**

# குருவானவர்களுக்காக செபம்

**இரக்கமிகு இறைவா, நீர் எங்களுக்கு கொடுத்த குருவானவர்களுக்காக நன்றி கூறுகிறோம். இவர்கள் வழியாக திருவருட்சாதனங்களில் நாங்கள் உம்மை காண்கிறோம். தங்களுடைய அழைப்பில் உறுதியாக இருந்திடவும் மக்களை நல் வழியில் நடத்திடவேண்டும் என்ற வாஞ்சையோடு இருந்திடவுள் இவர்களின் உள்ளதை அன்பினால் பற்றியெரிய செய்தருளும். இவர்களுக்கு ஞானமும், புரிந்துணர்வும். இயேசுவை பின்பற்றும் உறுதியான நிலைப்பாடும் தந்தருளும். உமது அரசை கட்டியெழுப்பவும், தங்கள் பணியில் மகிழ்ச்சி கொள்ளவும் உம்முடைய சமாதானத்தின் கருவியாக வாழவும் உமது அருளை தாரும். ஆமென்**

**கர்த்தர் கற்பித்த செபம் அனைவரும் சேர்ந்து சொல்லுவோம்**

தலைவர்: இயேசு கிறிஸ்துவே, நீர் பாடுபடப்போகும் முந்தைய இரவு நீர் உமது சீடர்களுக்கு அன்பின் ஆழத்தையும், மன்னிப்பு எனும் அருட்சாதனத்தையும், நினைவுகூறுதலையும் தந்து, நீர் அவர்களோடு மீண்டும் உம் வானக தந்தையின் விருந்தில் ஒன்றாய் இருப்பீர் என்றும் வாக்களித்தீர். நாங்கள் உம்மோடு ஒன்றாக இணைந்த இந்த வேளையில், உமது மரணத்தின் மூலம் வென்ற மன்னிப்பையும், சமாதானத்தையும், வாக்களித்தருளும். தந்தையோடும், தூய ஆவியோடும் ஒன்றாக வாழ்ந்து ஆட்சி செய்கின்றவரும் எங்கள் ஆண்டவருமான இயேசு கிறிஸ்து வழியாக மன்றாடுகிறோம்.

அனைவரும்: ஆமென்

சிலுவையின் அடையாளம்

தந்தை மகன் தூய ஆவியின் பெயராலே. ஆமென்

# புனித வெள்ளி






# பாடுபட்ட சிலுவை

**தலைவர்:**

**தந்தையே, இன்று நாங்கள் ஒன்று கூடியுள்ள இந்த வேளையில் நீர் எங்களுக்காக செய்த மிகப்பெரிய தியாகமான இயேசு கிறிஸ்துவை நினைவு கூறுகிறோம். கொலைக்களத்திற்கு இழுத்து செல்லப்படும் செம்மறியாட்டை போல், பணிவுடனும் கருணையுடனும் எங்களின் நிலைவாழ்விற்க்காக தன்னையே கிறிஸ்து சாவுக்கு பலியாக்கினார். மரச்சிலுவையில் கைகளை விரித்தவரை நாங்கள் நன்றியோடு அவரது அளப்பரிய அன்பை நினைவுகூருகிறோம். அவருடைய நன்மைகளால் நிரப்பி என்றும் அருளோடு வாழ்ந்திட வேண்டுகிறோம்.**

**அனைவரும்: ஆமென்**

# திருப்பாடல்கள்
## 30(31):2,6,12-13,15-17,25

பதில்மொழி:

**தந்தையே உம் கையில் என் ஆவியை ஒப்படைக்கிறேன்**

1. **ஆண்டவரே உம்மிடம் அடைக்கலம் புகுகிறேன்; ஒருநாளும் ஏமாற்றம் அடைய விடாதேயும்; உம்முடைய நீதியின்படி என்னை விடுவித்தருளும். உம் கையில் என் ஆவியை ஒப்படைக்கிறேன் ஆண்டவரே; வார்த்தையில் தவறாத இறைவா நீர் என்னை மீட்டருள்வீர்.**

2. **என் எதிரிகள் அனைவரும்டையவும் பழிச்சொல்லுக்கு நான் ஆளானேன்; என் அயலாரின் நகைப்புக்கு இலக்கானேன்; எனக்கு அறிமுகமானவர்களின் அச்சத்துக்குரியவன் ஆனேன்; வெளியே என்னைக் காண்கிறவர்கள் என்னைவிட்டு ஓடுகின்றனர்; இறந்து போனவன் போல் பிறர் கண்களுக்கு மறைவானேன்; உடைந்து போன மட்கலத்தைப் போலானேன்.**

3. **ஆனால் ஆண்டவரே நான் உம்மீது நான் உம்மீது நம்பிக்கை வைக்கன்றேன்; நீரே என் கடவுள் என்றேன்; என்கதி உம் கையில் உள்ளது ஆண்டவரே; என் எதிரிகளிடமிருந்தும் என்னைத் துன்புறுத்து வோரிடமிருந்தும் நீர் என்னை விடுவித்தருளும்.**

4. **கனிந்த உம் திருமுகத்தை எனக்குக் காட்டியருளும்; உம் அருளன்பைக் காட்டி என்னை ஈடேற்றும்; ஆண்டவர் மீது நம்பிக்கையுள்ளவர்களே மனத்திடன் கொள்ளுங்கள்; உங்கள் நெஞ்சம் உறுதி கொள்ளட்டும்.**

# கல்வாரி அன்பை

கல்வாரி அன்பை எண்ணிடும் வேளை
கண்கள் கலங்கிடுதே- கர்த்தா
உம் பாடுகள் இப்போதும் நினைத்தால்
நெஞ்சம் நெகிழ்ந்திடுதே

1. கெத்செமனே பூங்காவினில்
கதறி அழும் ஓசை
எத்திசையும் தொனிக்கின்றதே
எங்கள் மனம் திகைக்கின்றதே
கண்கள் கலங்கிடுதே

2. எம்மையும் உம்மைப் போல் மாற்றிடவே
உம் ஜீவன் தந்தீரன்றோ- எங்களை
தரை மட்டும் தாழ்த்துகிறோம்
தந்துவிட்டோம் அன்பின் கரங்களிலே
ஏற்று என்றும் நடத்தும்

https://www.youtube.com/watch?v=e_B7ghKUjhE

# KALVAARI ANBAI

**Kalvaari anbai ennidum vaelai**
**Kangal kalanggiduthe – karthaa**
**Um paadugal ippothum ninaitthaal nenjam neghizhnthuduthe**

1. **Gethsemane poongaavinil**
   **kathari azhum oesai**
   **Ettisaiyum thonikkindrathey**
   **Enggal manam thighaikindrathe**
   **Kangal kalangiduthey**

2. **Emmaiyum ummai poel maattridavae**
   **um Jeevan tantheeranroe – enggalai**
   **Tharai mattum thaazhthughiroem**
   **Thantthuvittoem anbin karanggalile**
   **Aettru endrum nadattum**

**https://www.youtube.com/watch?v=e_B7ghKUjhE**

**கடவுள் உலகின் மேல் கொண்ட மிகுந்த அன்பினால் நம்மை மீட்க தனது மகனையே கையளித்தார். எப்படி இந்த மீட்பு? சுலபமானதாய் இருந்ததா? இல்லை. மனதை கசக்கி பிழியும் துயரத்தை கொண்டது. ஆனால், நினைவில் கொள்ள வேண்டியது, நம்மேல் கொண்ட நிபந்தனையற்ற அன்பினாலும் தான். இயேசு தனது பாடுகளினாலும் மரணத்தினாலும் அன்பின் முழு அர்த்தத்தை நமக்கு தெரியப்படுத்துகிறார். இது முடிவல்ல. இன்னும் சிறிது நாள்களில் நிகழப்போகும் முக்கியமான நிகழ்வின் தொடக்கமே. பாடுகள் மற்றும் மரணத்தினாலன்றி நம்மால் கடவுளின் மகிமையை காண முடியாது. இதுவே எதிர்நோக்கின் நம்பிக்கையின் முக்கிய அடையாளமாகும். இதுவே பாவிகளுக்கும் புனிதர்களுக்கும் எதிர்நோக்கின் நம்பிக்கையின் அடையாளம். இதுவே உங்களுக்கும் எனக்கும் எதிர்நோக்கின் நம்பிக்கையின் அடையாளம்.**

என் பாவத்தினை இயேசு தனது பாடுகளாலும் மரணத்தாலும் மீட்டார் என்பதனை நான் எப்படி உணருகிறேன்?

இயேசுவின் நிபந்தனையற்ற அன்பை நான் எவ்வாறு மற்றவர்களோடு பகிர போகிறேன்?

கிறிஸ்துவின் மேல் கொண்ட என்னுடைய விசுவாசத்தை இந்த புனித வெள்ளி எந்த வகையில் பாதிக்கிறது அல்லது மாற்றுகிறது?

நமக்காக பலியாகி நம்முடைய தேவைகளுக்காக தந்தையிடம் பரிந்துரைத்து செபிக்க இயேசு சிலுவையில் கரங்களை விரித்துள்ளார். எனவே இத்தகைய சக்தி வாய்ந்த இணைப்பாளராக இயேசுவைப் பெற்றுள்ள இந்த வேளையில் நம் செபம் கட்டாயம் கேட்கப்படும் என்ற நம்பிக்கையில் திருச்சபை 10 பெரிய மன்றாட்டுகளைச் செபிக்கிறது. ஒவ்வொரு மன்றாட்டுக்கு பிறகும் ஆண்டவரை எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும் என்று கூறுவோம்.

( ஒவ்வொரு மன்றாட்டுக்கு பிறகும் சிறிது நேரம் அமைதியாக இருப்போம் )

## தூயதிருச்சபைக்காக

நம் இறைவனாகிய ஆண்டவர் திருச்சபைக்கு அமைதியும் ஒற்றுமையும் அளித்து, அதனைப் பேணிக்காக்க வேண்டுமென்று மன்றாடுவோமாக.

அனைவரும்: ஆமென்

## திருத்தந்தை, ஆயர்கள் மற்றும் திருச்சபையின் பல்வேறு பணியாளர்களுக்காகவும்

நம் திருத்தந்தை பிரான்சிஸ், திருச்சபையிலுள்ள எல்லா ஆயர்கள், குருக்கள், திருத்தொண்டர்க்காகவும், விசுவாசிகள் அனைவர்க்காகவும் மன்றாடுவோமாக.

அனைவரும்: ஆமென்

## திருமுழுக்குப் பெறத் தயாரிப்புச் செய்வோர்க்காக

நம் இறைவனாகிய ஆண்டவர் தம் இரக்கத்தைப் பொழிந்து அவர்களுடைய இதயங்களைத் திறந்துவிட மன்றாடுவோமாக.

அனைவரும்: ஆமென்

## கிறிஸ்துவர்களின் ஒற்றுமைக்காக

கிறிஸ்துவில் விசுவாசம் கொண்டுள்ள நம் சகோதரர் சகோதரிகள் ஆண்டவர் தம்மில் விசுவாசம் கொண்டு அனைவரையும் உண்மையின் பாதையில் வழிநடத்திட மன்றாடுவோமாக.

அனைவரும்: ஆமென்

## யூதமக்களுக்காக

முற்காலத்தில் அவர்களோடு பேசிய நம் இறைவனாகிய ஆண்டவர், தமது திருப்பெயரின் மீதுள்ள அன்பிலும் தமது உடன்படிக்கை மீதுள்ள பற்றுறுதியிலும் இவர்களை வளர்ச்சியடையச் செய்தருள வேண்டுமென்று மன்றாடுவோமாக.

அனைவரும்: ஆமென்

## கிறிஸ்துவில் இன்னும் விசுவாசம் கொள்ளாதவர்களுக்காக

இவர்கள் தூய ஆவியின் ஒளியைப் பெற்று மீட்புப் பாதைக்கு வந்துசெர வேண்டுமென்று மன்றாடுவோமாக.

அனைவரும்: ஆமென்

## கடவுள் நம்பிக்கை இல்லாதவர்களுக்காக

இவர்கள் நேர்மையான உள்ளத்தோடு நன்னெறியில் வாழ்ந்து, உண்மைக் கடவுளைக் கண்டடையுமாறு மன்றாடுவோமாக.

அனைவரும்: ஆமென்

## நாடுகளை ஆள்வோர்க்காக

**உலக மக்கள் அனைவரும் உண்மையான அமைதியும் உரிமை வாழ்வும் பெறும்பொருட்டு, ஆண்டு நடத்தியருள வேண்டுமென்று மன்றாடுவோமாக.**

**அனைவரும்: ஆமென்**

## துன்புறுவோர்க்காக

**எல்லாம் வல்ல தந்தையாகிய இறைவனின் அருளால், உலகிலிருந்து தவறுகள் அகலவும், துன்புறுவோர் அமைதி பெறவும் மன்றாடுவோமாக.**

**அனைவரும்: ஆமென்**

## கொரோனா கிருமியால் பாதிக்கப்பட்டவர்களுக்காக

**கொரோனா கிருமியால் பாதிக்கப்பட்டவர்கள் நலம் பெறவும், மன்றாடுவோமாக.**

**அனைவரும்: ஆமென்**

## இறுதியாக கர்த்தர் கற்பித்த செபம் அனைவரும் சேர்ந்து சொல்லுவோம்

ஆணி கொண்ட - இந்த பாடலை தியானிப்போம்
https://www.youtube.com/watch?v=vwaaCXp9iZI

(அமைதியாக)

**ஆணி கொண்ட உம் காயங்களை
அன்புடன் முத்தி செய்கின்றேன் (2)
பாவத்தால் உம்மைக் கொன்றேனே -2
ஆயனே என்னை மன்னியும்**

1. **வலது கரத்தின் காயமே -2
அழகு நிறைந்த ரத்தினமே
அன்புடன் முத்தி செய்கின்றேன்**

2. **இடது கரத்தின் காயமே -2
கடவுளின் திரு அன்புருவே
அன்புடன் முத்தி செய்கின்றேன்**

3. **வலது பாதக் காயமே -2
பலன் மிகத் தரும் நற்கனியே
அன்புடன் முத்தி செய்கின்றேன்**

4. **இடது பாதக் காயமே -2
திடம் மிகத்தரும் தேனமுதே
அன்புடன் முத்தி செய்கின்றேன்**

5. **திருவிலாவின் காயமே -2
அருள் சொரிந்திடும் ஆலயமே
அன்புடன் முத்தி செய்கின்றேன்**

https://www.youtube.com/watch?v=vwaaCXp9iZI

ஆணி கொண்ட - இந்த பாடலை தியானிப்போம்
https://www.youtube.com/watch?v=vwaaCXp9iZI

(அமைதியாக)

**Aani konda um kaayangalai**
**Anbudan mutthi seighindren**
**Paavatthaal ummai kondrene -2**
**Aayane ennai manniyum -2**

1. **Valathu karatthin kaayame -2**
   **Azhagu niraintha rattiname**
   **Anbudan mutthi seighindren**

2. **Idathu karatthin kaayame -2**
   **Kadavulin thiru anburuvae**
   **Anbudan mutthi seighindren**

3. **Valathu paathak kaayame -2**
   **Palan mighath tharum narkaniyae**
   **Anbudan mutthi seighindren**

4. **Idathu paathak kaayame -2**
   **Thidam mighattarum thaenamuthae**
   **Anbudan mutthi seighindren**

5. **Thiruvilaavin kaayame -2**
   **Arul sorinthidum aalayamae**
   **Anbudan mutthi seighindren**

https://www.youtube.com/watch?v=vwaaCXp9iZI

**செபம்:**

**என்றும் வாழும் எல்லாம் வல்ல இறைவா, உம்முடைய திருமகனின் பாடுகளாலும் சிலுவைச் சாவினாலும் உயிர்ப்பினாலும் எங்களை மீட்டருளினீர். பேரிரக்கத்துடன் நீர் ஆற்றிய இம்மீட்புச் செயலின் பலன் எங்களில் என்றும் நிலைத்திருக்கச் செய்தருளும். எங்கள் ஆண்டவருடைய மரணத்தில் வெளிப்பட்ட உமது பேரன்பைக் கண்டுணர்ந்து, நாங்கள் அவ்வன்பிலே என்றும் நிலைத்து வாழ்த்திட அருள்வீராக. எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவழியாக உம்மை மன்றாடுகிறோம்.**

**அனைவரும்: ஆமென்**

**(அனைவரும் அமைதியில் திருச்சிலுவையை ஆராதிக்கலாம்)**

**(திருச்சிலுவை ஆராதனையின் இறுதியில் அமைதியாக கர்த்தர் கற்பித்த செபத்தை கூறலாம்)**

**(மற்றவர்கள் திருச்சிலுவை ஆராதனையில் இருக்கும்வரையில் அமைதியை கடைபிடிப்போம்)**

# உயிர்ப்பு ஞாயிறு



Diocese of Penang

**குறிப்பிட்ட நேரத்தில் மட்டுமே செபிக்க வேண்டும்: பாஸ்க திருவிழிப்பிற்கு /சூரிய அஸ்தமனத்திற்கு பிறகு / ஞாயிறு**

# மெழுகுவர்த்தி

வீட்டில் உள்ள ஒவ்வொருவருக்கும் இருத்தல் அவசியம்





# உணவு

விரும்பினால்

# சந்தோஷம் பொங்குதே

சந்தோஷம் பொங்குதே – (2)
சந்தோஷம் என்னில் பொங்குதே அல்லேலூயா
இயேசு என்னை இரட்சித்தார்
முற்றும் என்னை மாற்றினார்
சந்தோஷம் என்னில் பொங்குதே

1. வழிதப்பி நான் திரிந்தேன்
   பாவ பழியதை சுமந்தலைந்தேன் 2
   அவர் அன்பு குரலே
   அழைத்தது என்னையே 2
   அந்த இன்ப நாளில் எந்தன் பாவம் நீங்கிற்றே 2

2. சத்துரு சோதித்திட
   தேவ உத்திரர் உடன் வருவான் 2
   ஆனால் இயேசு கைவிடார்
   தானாய் வந்து இரட்சிப்பார் 2
   இந்த நல்ல இயேசு எந்தன் சொந்தமானாரே 2

3. பாவத்தில் சீவிப்பவர்
   பாதாளத்தில் அழிந்திடுவார் 2
   நானோ பரலோகத்தில்
   நாளும் பாடல் பாடுவேன் 2
   என்னில் வாழும் இயேசுவோடு என்றும் வாழுவேன் 2

https://www.youtube.com/watch?v=iFCudzI4Fqg

# SANTHOSHAM PONGUTHEY

**Santhosham ponguthey -(2)**
**Santhisham ennil ponguthey Alleluia**
**Yesu ennai iratchittaar**
**Muttrum ennai maattrinaar**
**Santhosham ennil ponguthey**

1. **Vazhithappi naan thirinthaen**
   **Paava pazhiyathai sumanthalainthaen 2**
   **Avar anbu kuralae**
   **Azhaitthathu ennaiye 2**
   **Antha inba naalil enthan paavam neenghittrae 2**

2. **Satthuru soethitthida**
   **Theva utthirar udan varuvaan 2**
   **Aanal Yesu kaividaar**
   **Thaanai vanthu iratchippaar 2**
   **Intha nalla Yesu enthan sonthamaanaare 2**

3. **Paavatthil seevippavar**
   **Paathalatthil azhinthiduvaar 2**
   **Naanoe paraloegatthil**
   **Naalum paadal paaduvaen 2**
   **Ennil vaazhum yesuvoedu endrum vaazhuvaen 2**

https://www.youtube.com/watch?v=iFCudzI4Fqg

# தொடக்க செபம்

( பீடத்தில் ஒளிரும் மெழுகுவர்த்தி வைக்கப்பட  வேண்டும் )

**சிலுவையின் அடையாளம்**

**தந்தை மகன் தூய ஆவியின் பெயராலே. ஆமென்**

**தலைவர்:** உயிர்த்தெழுந்த இயேசுவே, இன்று நாங்கள் சுதந்திரசத்தை சுவாசிக்க நீர் மிகப்பெரிய விலையை கொடுத்தீர். உமது அளப்பரிய இரக்கத்தையும் உமது புனித நாமத்தையும் நாங்கள் வணங்குகிறோம். வானுலக தந்தையே, எங்கள் உள்ளத்தில் வாரும்; தூய ஆவியானவரே எங்களின் செயல்களிலும் எண்ணங்களிலும் நீர் வீசியருள உம்மை அழைக்கிறோம். எங்களின் வாழ்வை  மாற்றி உயிர்த்த இயேசுவை போல் மாற்றிடும்.

**அனைவரும்:** ஆமென்

# கொலோசியர் 3:1-4

திருத்தூதர் பவுல் கொலோசியருக்கு எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம்

**நீங்கள் கிறிஸ்துவோடு உயிர்பெற்று எழுந்தவர்களானால் மேலுலகு சார்ந்தவற்றை நாடுங்கள். அங்குக் கிறிஸ்து கடவுளின் வலப்பக்கத்தில் அமர்ந்திருக்கிறார். இவ்வுலகு சார்ந்தவை பற்றி அல்ல, மேலுலகு சார்ந்தவை பற்றியே எண்ணுங்கள். ஏனெனில், நீங்கள் கிறிஸ்துவோடு இறந்துவிட்டீர்கள். உங்கள் வாழ்வு அவரோடு இணைந்து கடவுளிடம் மறைந்து இருக்கிறது. கிறிஸ்துவே உங்களுக்கு வாழ்வு அளிப்பவர். அவர் தோன்றும் பொழுது நீங்களும் அவரோடு மாட்சி பொருந்தியவராய்த் தோன்றுவீர்கள்.**

தலைவர்: ஆண்டவரின் அருள்வாக்கு.

அனைவரும் : இறைவனுக்கு நன்றி.




**https://www.youtube.com/watch?v=hA8vVA9LYvI**

**இயேசுவின் உயிர்ப்பு மிக மிக முக்கியமானது. மரியா மதலேன் கல்லறைக்குள் பார்த்த போது கல்லறைக்குள் இருட்டாக இருந்தது ஏனென்றால் அவள் விடியற்காலையில் சென்றாள். ஆனால் இங்கே குறிப்பிடப்படும் இருட்டு, விசுவாசத்தின் இருட்டு.ஏனெனில் மரியா மதலேன் இன்னும் விசுவாசத்தின் இருட்டில் இருந்தாள். சீடர்கள் புனித யோவானும் புனித பேதுருவும் விசுவாசத்தின் இருட்டில் இருந்தார்கள். இதைத்தான் யோவான் குறிப்பிடுகிறார். பிறகு அவர்களும் கல்லறைக்குள் பார்த்தார்கள். யோவான் விசுவாசித்ததால் அவரின் இருட்டு மறைந்தது. புனித யோவான் தமது நற்செய்தியின் வழி நம் அனைவரையும் நிக்கோதேமுஸ், அரிமதேய யோசேப்பு போன்று ஒளியில் வாழ அழைக்கிறார் . ஒளியில் வாழ்வென்பது இயேசுவை நாம் முழுமையாக விசுவாசிப்பது ஆகும். இயேசு உயிர்த்தார் என்பதற்கு வெறுமையான கல்லறையே சாட்சி. இயேசு பாடுபட்டு, சிலுவையில் இறந்து, உயிர்த்து சாவின் சங்கிலியை அறுத்தார். நம் அனைவரையும் புது வாழ்வுக்கு அழைக்கிறார். இயேசு நம்முடன் இருக்கிறார். வாருங்கள் ஒளியின் மகிமையை அனுபவிப்போம்.**

**நாம் அனைவரும் புதுவாழ்வில் நுழைந்திட, பாஸ்க மறைபொருள் வழியாக கிறிஸ்துவோடு திருமுழுக்கில் புதைக்கப்பட்டோம். ஆகவே இப்பொழுது நமது திருமுழுக்கு வாக்குறுதிகளை புதுப்பித்துக்கொள்வோம்**

**தலைவர்:** சாத்தானை விட்டுவிடுகிறீர்களா?

**அனைவரும்:** விட்டுவிடுகிறேன்

**தலைவர்:** நீங்கள் பாவத்தின் மாயக் கவர்ச்சிகளை விட்டுவிடுகிறீர்களா?

**அனைவரும்:** விட்டுவிடுகிறேன்

**தலைவர்:** அவனுடைய பொய்யான வாக்குறுதிகளை விட்டுவிடுகிறீர்களா?

**அனைவரும்:** விட்டுவிடுகிறேன்

**தலைவர்:** வானமும், வையமும் படைத்த எல்லாம் வல்ல தந்தையாகிய இறைவனை விசுவசிக்கிறீர்களா?

**அனைவரும்:** விசுவாசிக்கிறேன்

தலைவர்: அவருடைய ஒரே மகனும், கன்னிமரியிடமிருந்து பிறந்து, பாடுபட்டு, அடக்கம் செய்யப்பட்டு, இறந்தோரில் நின்று உயிர்த்தெழுந்து, தந்தையின் வலப்பக்கம் விற்றிருப்பவருமான நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவை விசுவசிக்கிறீர்களா?

அனைவரும்: விசுவாசிக்கிறேன்

தலைவர்: தூயஆவியையும், தூய கத்தோலிக்கத் திருச்சபையையும், புனிதர்களின் சமூக உறவையும், பாவமன்னிப்பையும் உடலின் உயிர்ப்பையும், நித்திய வாழ்வையும் விசுவசிக்கிறீர்களா?

அனைவரும்: விசுவாசிக்கிறேன்

தலைவர்: வல்லமைமிக்க இறைவா, இயேசு கிறிஸ்து எங்களுக்கு நீரினாலும் தூய ஆவியாலும் மறுபிறப்பு அளித்துள்ளார். நாங்கள் என்றும் அவருக்கு உகந்தவர்களாய் வாழ்ந்திட வழிநடத்த மன்றாடுகிறோம்.

அனைவரும்: ஆமென்

(மெழுகுவர்த்தியை அணைக்கலாம்)

அனைவரும்: ஆண்டவரே எங்கள் மன்றாட்டை கேட்டருளும்

1. உலகெங்கும் பரவியிருக்கும் நமது கத்தோலிக்க திருஅவைக்காக மன்றாடுவோம். நமது பாப்பரசர் பிரான்சிஸ் , ஆயர் செபாஸ்டியன் பிரான்சிஸ் மற்றும் அனைத்து துறவற சகோதரர்களும் உயிர்த்த இயேசுவின் மகிளாசியை பகிர்ந்திட மன்றாடுவோம்.

2. பதவியில் இருப்போர் நேர்மையோடும் நீதியோடும் ஆட்சி செய்திட மன்றாடுவோம்

3. புதிதாக திருமுழுக்கு பெற்றவர்கள் இயேசுவை முழுமனதோடு பின்பற்றவும், விசுவாசத்தில் நிலையாய் இருக்கவும் மன்றாடுவோம்

4. துன்பப்படுவோர் அனைவரும் மரியா மக்திலனை போல் உயிர்ப்பின் மகிழ்ச்சியை அனைவருக்கும் பறைசாற்ற மன்றாடுவோம்

5. மியான்மரில் சமாதானமும் நம்பிக்கையும் ஆறுதலும் பெற்றிட மன்றாடுவோம்

6. நமது தனிப்பட்ட கருத்துகளுக்காக மன்றாடுவோம்.

**கர்த்தர் கற்பித்த செபம் அனைவரும் சேர்ந்து சொல்லுவோம்**

**தலைவர்:** அன்புமிக்க இறைவா, இருளிலிருந்து ஒளிக்கு நீர் எங்களை கொண்டுவந்தீர். மிகவும் மோசமான சூழலை நீர் அழகாக மாற்றிவிட்டீர். சாவு வீழ்ந்தது வெற்றி கிடைத்தது. உம் திருமகனுடைய உயிர்த்தெழுதலைக் கொண்டாடி மகிழ்ந்தோம். சாவை வென்று உயிர்த்தெழுந்த உம் திருமகனின் ஆவியை எங்கள் மீது நிறைவாகப் பொழிந்தருளும். இதனால் நாங்கள் எங்கள் வாழ்வில் நேரிடும் அனைத்தையும் பாஸ்காவின் வெற்றிப் பூரிப்புடன் எதிர்கொள்ளத் துணிந்து செல்வோமாக. எங்கள் ஆண்டவர் கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகின்றோம்.

**அனைவரும்:** ஆமென்

சிலுவையின் அடையாளம்

**தந்தை மகன் தூய ஆவியின் பெயராலே. ஆமென்**

**ஒன்றாக அமர்ந்து உணவருந்துதல்**

உயிர்த்த ஆண்டவரின் மகிழ்ச்சியை ஒன்றாக அமர்ந்து உணவருந்துதல் மூலம் கொண்டாட ஊக்குவிக்கப்படுகிறார்கள்




Est. 1955
DIOCESE OF PENANG
MALAYSIA